அன்பும் பண்பும் நிறைந்தோருக்கு

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்,

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **பிப்ரவரி 5ம்** தேதியன்று திருச்சியில் **பித்அத் ஒழிப்பு மற்றும் சமுதாய பாதுகாப்பு மாநாடு** நடக்கவிருப்பதை தாங்கள் அறிவீர்கள்.

இறைச்செய்தி மட்டுமே இஸ்லாம் எனும் அடிப்படை போதனையை எத்திக்கும் எடுத்துச் சொல்லும் கடமையை உணர்ந்து மக்களிடம் நிலவும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக தவ்ஹீத் ஜமாஅத் தொடர்பிரச்சாரம் செய்து வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்..

அதன் ஒரு மைல் கல்லாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நபிகளாரின் போதனைகளையும் எச்சரிக்கைகளையும் பல மக்கள் இன்னும் அறியாமல் உள்ளனர். மார்க்கத்தில் இல்லாத பல காரியங்களைச் செய்தும் வருகின்றனர். அவர்களிடம் அது குறித்த தெளிவை இம்மாநாடு ஏற்படுத்த உள்ளது. இன்ஷா அல்லாஹ்.

அத்துடன், நமது இஸ்லாமிய சமுதாயம் இந்நாட்டில் நம் நிலையை நிதானிக்காமலும் ஆபத்தை அறியாமலும் உள்ளனர்.

பாசிச பாஜக அரசு மத்தியில் ஆட்சியில் அமர்ந்தது முதல் அரசியல் சாசனத்திற்கு எதிராக தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிரான தொடர் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

**» பொது சிவில் சட்டத்தை அமுல்படுத்தி நமது ஷரீயத் சட்டங்களை நாம் கடைபிடிக்க முடியாதவாறு செய்ய பாஜக துடிக்கிறது. அதன் முதல் கட்டமாக உத்தரகாண்டில் விரைவில் பொது சிவில் சட்டத்தை கொண்டு வர உள்ளது. இது நம்மை நெருங்கி வரும் ஓர் அபாயம். முத்தலாக் தடைச் சட்டம் இதற்கான ஒரு முன்னோட்டமே!**

**» மனித இனம் ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து பிறந்தது தான். யாரும் யாரை விட நிறம், மொழி, பிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உயர்ந்தவரும் அல்ல. தாழ்ந்தவரும் அல்ல என்ற குர்ஆன் கூறும் தத்துவத்தின் பிரகாரம் ஏற்றத்தாழ்வுகளை அழித்துவிட்டுச் சென்றார்கள் நமது தூதர்(ஸல்) அவர்கள். இது தான் மாற்று மத மக்கள் இஸ்லாத்தை நேசித்து ஏற்றுக் கொள்வதற்கான முதன்மை காரணம்.**

**» இந்தக் கருத்தை இல்லாமல் அழித்துவிட்டால் இஸ்லாத்தின் வளர்ச்சியை தடுக்கலாம் எனும் சதித்திட்டத்துடன், பொருளாதாரத்தில் நலிவடைந்த பாஸ்மாண்டா முஸ்லிம்களை இஸ்லாத்தில் உள்ள ஒரு சாதியினர் என அவர்களைக் குறிப்பிட்டு இஸ்லாமும் சாதிகள் கொண்ட மார்க்கம் என்பது போல காட்டி நம் மார்க்கத்தின் மேல் ஓர் அபாண்டத்தை பாஜக அரசு சுமத்துகிறது.**

**» மாட்டிறைச்சியின் பெயரால் முஸ்லிம்களைக் கொல்லும் கும்பல் தாக்குதல்கள் ஓர் முடிவின்றி தொடர்கதையாகி வருகின்றன. சட்டமும் அதைச் சட்டைச் செய்வதில்லை.**

**» கலவரங்கள் செய்வதற்காகவே முஸ்லிம்களின் பகுதியில் மத ஊர்வலங்கள் நடத்தி முஸ்லிம்களின் வாழ்வாதாரத்தையும் வசிப்பிடத்தையும் வணிகத்தலங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் தீக்கறையாக்கி தன் வெறுப்பை தீர்த்துக் கொள்கின்றனர். அரசிடம் நீதி கேட்கப்பட்டால் நீதி கேட்பவர்களுக்கு எதிராக புல்டோசர் பயங்கரவாதம் நிகழ்த்தப்படுகிறது.**

**» பாங்கோசை ஒலிக்க அனுமதி மறுப்பு. பள்ளிவாசல்களும் மதரஸா பாடசாலைகளும் இடிக்கப்படுகின்றன. உ.பி.யில் வீட்டில் தொழுதாலும் கைது நடவடிக்கை பாய்கிறது. அபகரிக்கப்பட்ட பாபர் மசூதியின் ரணம் முஸ்லிம்களின் உள்ளத்தில் ஆறவில்லை. அதற்குள் காசி மதுரா பள்ளிவாசல்களை கோயில்களாக மாற்ற நீதிமன்றம் துணைகொண்டு செயல்பட்டு வருகிறது.**

**» ஒவ்வொரு மதத்தவரும் தத்தமது மத வழிபாடுகளுடனும் அடையாளங்களுடனும் வாழ அனுமதிக்கும் இந்திய அரசியல் சாசனத்தை தூற எறிந்து விட்டு முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணி தடை விதிக்கிறது.**

**» சீக்கியர்கள் தங்கள் டர்பனுக்குள் கிர்பான் எனும் குறுவாள் வைத்துக் கொண்டு விமானத்தில் செல்ல அனுமதியளிக்கப்படுகிற அதே நேரத்தில் தான், சிறு துண்டை தலையில் அணிய தடைவிதிக்கப்படுகிறது.**

**» நித்தம் தன் ரத்தம் கொடுத்து பொருளாதாரத்தையும் அள்ளிக் கொடுத்து இந்திய நாட்டின் முதல் தர குடிமக்கள் என்ற நிலையையும் விட்டுக் கொடுத்து நாம் நமது சதவிகிதத்தை விட அதிகமாக நம் நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டிருக்க நம்மையே அகதிகளாக்க குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டு வருகின்றனர்.**

இவ்வாறு நமது சமுதாயத்திற்கு எதிரான ஆபத்துகளும் பாதிப்புகளும் ஏராளம். ஆனால், இன்னும் அதிகமான முஸ்லிம்கள் இது குறித்து விழிப்புணர்வு அடையவில்லை. பாதிப்புகளை உணர்ந்து கல்வியிலும் அதிகாரத்திலும் முன்னேறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பதே நமது சமுதயாத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும்.

இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஒரு பாதிப்பு எனில் குரல் கொடுக்க அத்தனை முஸ்லிம்களும் களம் காணுவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதே நமக்கெதிரான தாக்குதல்களை மட்டுப்படுத்தும்.

எனவே, மார்க்க நெறி முறைத் தவறாமல் முஸ்லிம் சமுதாயம் வாழவும் நாளைய நம் வாழ்வும் வழிபாடும் பறிக்கப்படாமல் இருக்கவும் ஜமாஅத்தார்கள் தங்கள் முஹல்லா மக்களுடன் இந்த மாநாட்டில் கலந்துக் கொள்ள வருகைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் வருகையை எதிர்பார்க்கும்,
எம்.எஸ். சுலைமான்,
மாநில தலைவர், **TNTJ.**

அனைவரையும் குடும்பத்துடன் அன்போடு அழைக்கிறது...

## தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்

### மாநிலத் தலைமையகம்


தொடர்புக்கு : 75502 77119, 99520 56555, 63851 37804, 99520 35333

உங்களது நன்கொடைகளை TAMILNADU THOWHEED JAMAATH, A/C No : 788274827 INDIAN BANK, MANNADY BRANCH, CHENNAI 01 IFS CODE : IDIB000M016 என்ற பெயரில் செக் அல்லது டி.டி.யாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

25, அரண்மனைக்காரன் தெரு, மண்ணடி, சென்னை 01 Email : tntjho@gmail.com Cell : 99520 35333


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**உங்கள் இறைவனிடமிருந்து எது உங்களுக்கு அருளப்பட்டதோ அதையே பின்பற்றுங்கள்! அவனையன்றி பொறுப்பாளர்களைப் பின்பற்றாதீர்கள்! குறைவாகவே படிப்பினை பெறுகிறீர்கள்**

**அல்குர்ஆன் 07:03**

# பித்அத் ஒழிப்பு

*மற்றும்*

# சமுதாயப் பாதுகாப்பு

# மாநாடு

இன்ஷாஅல்லாஹ்

05.02.2023

*திருச்சி, சிறுகனூர்*

மாநாட்டுத் திடல்
Goole map location

இறைவன் உண்டாக்கியதே வழிபாடாகும்!

மனிதன் உண்டாக்கியது வழிகேடாகும்!!

# நிகழ்ச்சி நிரல்

காலை 9 மணி முதல் : **கண்காட்சி அரங்கம் ஆரம்பம் மற்றும் துவக்க உரை**

மாலை 3 மணி முதல் 9.30 மணி வரை : **மேடை நிகழ்ச்சிகள்**

**பட்டமளிப்பு நிகழ்ச்சி**

M.I.Sc மாணவர்கள் மற்றும் ஹிப்ளு மதரஸா மாணவர்கள்

**மாநாட்டு உரை**

உருது உரை : சி.வி. இம்ரான் (மாநிலச் செயலாளர்)

ஆங்கில உரை : என்.அல் அமீன் (மாநிலச் செயலாளர்)

**பட்டிமன்ற நிகழ்ச்சி**

**பித்அத் உருவாக பெரிதும் காரணம் ஆலிம்களா ? மக்களா ?**

நடுவர் : கே.எஸ். அப்துர் ரஹ்மான் ஃபிர்தவ்ஸி

| ஆலிம்களே | மக்களே |
|---|---|
| சகோ. முஹம்மது ஒலி M.I.Sc | சகோ. சபீர் அலி M.I.Sc |
| சகோ. இ. பாருக் | சகோ. ஐ. அன்சாரி |
| சகோ. அப்துல் அஜீஸ் M.I.Sc | சகோ. அப்துர் ரஹ்மான் M.I.Sc |

**சிறப்புரை**

சகோ. எம்.எஸ்.சுலைமான் (மாநிலத் தலைவர்)

**நரகில் தள்ளும் பித்அத்துகள் !**

சகோ. ஆர். அப்துல் கரீம்M.I.Sc (பொதுச் செயலாளர்)

**சமூக பாதுகாப்பிற்கு தீர்வு என்ன ?**

சகோ. எம். ஷம்சுல்லுஹா ரஹ்மானி (மேலாண்மைக் குழு தலைவர்)

**வஞ்சிக்கப்படும் முஸ்லிம்களே! வல்லோன் உதவி எப்போது ?**

சகோ. எம்.ஐ. சுலைமான் (TNTJ பேச்சாளர்)

**இறுதி வெற்றி ஏகத்துவத்திற்கே !**

ஒவ்வொரு புதுமையும் பித்அத் ஆகும்.
ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும்.
ஒவ்வொரு வழிகேடும் நரகில் சேர்க்கும்..



## பித்அத் ஒழிப்பு மாநாடு

05.02.2023
திருச்சி

# கண்காட்சி அரங்கம்

- திருமணத்தில் நடைபெறும் பித்அத்துகள்.
- திக்ருகளின் பெயரால் நடைபெறும் பித்அத்கள்.
- துஆக்களின் பெயரால் நடைபெறும் பித்அத்கள்.
- ஜனாஸாவின் பெயரால் நடைபெறும் பித்அத்துகள்,
- பித்அத்தை ஒழிக்க நாம் செய்ய வேண்டியவை.
- திருக்குர்ஆனின் பெயரால் நடைபெறும் பித்அத்கள்.
- தொழுகை, நோன்பின் பெயரால் நடைபெறும் பித்அத்கள்.
- பரக்கத் கிடைக்கும் என்ற பெயரில் கடைபிடிக்கப்படும் பித்அத்கள்.
- பித்அத்திற்கு துணை போவதால் நடக்கும் தீமைகள்.
- பித் அத் குறித்து இஸ்லாத்தின் எச்சரிக்கைகள்.
- வஹீ மட்டுமே மார்க்கம்.
- கல்வி வழி காட்டி முகாம்
- ஆம்புலன்ஸ் சேவை.
- கல்வியின் அவசியம்.
- முஸ்லிம்களை தீவிரவாதிகளாக சித்தரிப்பது.
- அரும்பணிகள், வெள்ள நிவாரன பணிகள்.
- விடுதலைப்போரில் முஸ்லிம்களின் பங்கு.
- குறிவைக்கப்படும் சிறுபான்மை மக்களின் உயிர்கள்.
- குடியுரிமை திருத்தச் சட்டம்
- ஆலய உரிமைகள் பறிப்பு (பாபர் மஸ்ஜித், கியான்வாபி , ஷாஹி ஈத்கா )
- சட்டங்களில் (ஷரியத், முத்தலாக், பொது சிவில்) தலையிடுதல்.
- முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்படும் வாழ்வாதார பாதிப்புகள்.
- ஹிஜாப்.
- அழிக்கப்படும் இஸ்லாமிய அடையாளங்கள்.
- சமூக பாதுகாப்பில் சமூக வலைத்தளங்கள்










